2006 ஜனவரி 21] [திரு. சி.வி. சண்முகம்]

அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழுவும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு கல்விக் கட்டண விகிதங்களை அமைக்க ஆலோசனைகள் வழங்கலாம் என தெரிவித்ததைத் தொடர்ந்து, அரசாணை 48, 21–7–2000 அன்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேலும், இவ்வரசாணையின் அடிப்படையில், பள்ளிகள் அமைந்துள்ள பகுதி, பள்ளியின் தரம், அவற்றில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டடம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதி, மாணவர் எண்ணிக்கை, படிக்கும் வகுப்பு இவற்றின் அடிப்படையில் கல்விக் கட்டணங்களை நிர்ணயிக்க வழிகாட்டி நெறிமுறைகளை மெட்ரிக் பள்ளி இயக்குநர் அவர்களின் செயல்முறை, நாள் 17–8–2000 அன்று அறிவுரை வழங்கியுள்ளார்கள். மேலும், நிர்ணயிக்கப்படும் கல்விக் கட்டணம் நியாயமானதாகவும், பெற்றோர்கள் பணம் செலுத்தும் வசதிக்கேற்ப இருந்திடல் வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முற்பகல் 11–25

3. கவன ஈர்ப்பு

சீர்காழி தொகுதி, மகேந்திரபள்ளி முதல் காட்டூர் வரை கொள்ளிடம் ஆற்றங்கரையைப் பலப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55–ன்கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. நா. சந்திரமோகன் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. நா. சந்திரமோகன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சீர்காழி தொகுதி, மகேந்திரப்பள்ளி முதல் காட்டூர் வரையுள்ள கொள்ளிடம் ஆற்றங்கரையைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்த" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2006 ஜனவரி 21

அறிக்கை

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், மகேந்திரப்பள்ளி முதல் காட்டூர் வரை உள்ள கொள்ளிடம் வெள்ளக்கரை சுமார் 6 கி.மீ. தூரத்தைப் பலப்படுத்தும் பணியானது, அரசாணை எண் 585, வருவாய்த் துறை, நாள் 20–10–2005–ல் ஒப்பளிக்கப்பட்ட சுனாமி நிவாரணப் பணிகளின்கீழ் உள்ள, ஒட்டுமொத்தக் கருத்துருவில் ரூ. 1.23 கோடிக்கு இடம் பெற்றுள்ளது. விரைவில் இப்பணியைச் செய்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். சீர்காழி தொகுதி, மகேந்திரப்பள்ளியிலிருந்து, காட்டூர் வரையுள்ள கொள்ளிடம் வெள்ளக்கரை, சுமார் 6 கிலோமீட்டர் தூரத்திற்கு ரூ.1.23 கோடி மதிப்பில் விரைவில் பலப்படுத்தப்படவுள்ளது என்று உறுதி அளிக்கப்பட்டுள்ளது. அதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்குவதோடு மட்டுமல்லாமல், கடந்த மாதங்களில் பெய்த பெருமழை, மேட்டூர் அணையிலிருந்தும், அமராவதி அணையிலிருந்தும் திருப்பி விடப்பட்ட வெள்ள நீர் இரண்டு முறை கொள்ளிடம் ஆற்றின் வழியாகத்தான் கடலில் வடிந்தது. அதில், இரண்டாவது முறை, விநாடிக்கு சுமார் 4.50 இலட்சம் கன அடி நீர் கொள்ளிடம் ஆற்றில் வந்ததனால், கொள்ளிடம் ஆற்றுப் பாலத்திலிருந்து கடலுக்கு அருகிலுள்ள கிராமங்களான முதலைமேடு, சந்தப்படுகை, முதலைமேடு திட்டு, அலக்குடி, நாணல்படுகை, நாதல்படுகை போன்ற கிராமங்களில், கொள்ளிடக் கரை உடைப்பு எடுத்து, அதனைச் சுற்றியுள்ள 40–க்கும் மேற்பட்ட கிராமங்களில் வெள்ள நீர் புகுந்து பெருத்த சேதத்தை விளைவித்தது. அதனை வருங்காலங்களில் தடுக்க ஏதுவாக, கொள்ளிடத்திலிருந்து மகேந்திரப்பள்ளி வரையிலுள்ள, சுமார் 15 கிலோமீட்டர் கொள்ளிடக் கரையைப் பலப்படுத்தி, அதன் மேல், நெடுஞ்சாலைத் துறையின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 25–க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் போக்குவரத்து வசதிபெறும் வகையில், தார்ச்சாலை அமைத்துக்கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2006 ஜனவரி 21] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்ளிடக் கரையைப் பலப்படுத்துவது, கடந்த சில நாட்களுக்கு முன்னால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் மூலம் அரசின் கவனத்திற்கு ஈர்க்கப்படுகிறது. 9 பணிகளுக்கு, கிட்டத்தட்ட 19.271 கோடி ரூபாய்க்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு, பணி விரைவில் தொடங்குகின்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 16 கிலோமீட்டர் கொள்ளிடம் கரையைத் தார்ச்சாலைகளாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையினை இங்கே எழுப்பியிருக்கின்றார்கள். அதனுடைய சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்கு அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். டாக்டர் மு. தம்பிதுரை.

டாக்டர் மு. தம்பிதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2006 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 191 முதல் 193 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11–30

(ஆ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2006 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் நூற்று முப்பத்து ஒன்றாவது அறிக்கையினைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். திருமதி வளர்மதி ஜெபராஜ்.